ஸ்ரீ:

## ஸ்ரீ அஹோபில மடம்

## உத்தர அஹோபிலம்- நைமிசாரண்யம் க்ஷேத்ர மாஹாத்மியம்

ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்தில், கருடாத்ரி மலையில், நவ ந்ருஸிம்ஹர் ஸன்னதிகள் உள்ளது. அந்த ஸன்னதிகள் “சென்று காண்டாற்கு அரிய கோயில்” என்று திருமங்கை ஆழ்வார் கூறியதற்கு ஏற்ப மலையில் கஷ்டப்பட்டு சேவிக்க வேண்டும். அனால் அந்த நவ நரஸிம்ஹர்களை, அங்கு இருப்பது போல், நைமிசாரண்யத்தில் பிங்க் மார்பிளில் (PINK MARBLE -like Sri Ram Mandir in Ayodhya) அற்புதமாக கட்டப்பட்டுள்ள “உத்தர அஹோபிலம்” என்று பெயரிடப்பட்டுள்ள நவ நரஸிம்ஹர் கோவிலில் ஒரு ப்ரதக்ஷிணத்தில் சுலபமாக சேவிக்கலாம்.

### இங்கு நவ நரஸிம்ஹர்கள் சன்னதி ஏன் ஏற்பட்டது?

**சுமார் 80 வருஷங்களுக்கு முன்பு நைமிசாரண்யத்தில் ஸ்ரீதராசார்யார்** என்ற ஒருவர் அஹோபிலம் சென்று 40ம் பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கரிடம் சமாஸ்ரயணம் பரண்யாஸம் பண்ணிக்கொண்டு ஸ்ரீமத் அழகியசிங்கரிடமிருந்து மாலோலன் போன்ற ஒரு லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ விக்ரஹத்தை பெற்றுக்கொண்டு தன் சிரஸ்ஸிலேயே சுமந்து கொண்டு வந்து அந்த பெருமாளை நைமிசாரண்யத்தில் ஒரு ஸன்னதி கட்டி திருவாராதனம் செய்து கொண்டு வந்தார். அந்த கோயிலின் வாசலில் “இதம் ஸ்தா$_2$நம் ஸம்ப$_4$ந்த் ஸ்ரீ அஹோபில மட்” என்று எழுதி வைத்திருந்தார். ஸ்ரீ தேவனார்விளாகம் அழகியசிங்கர் (43-ம் பட்டம் அஹோபில மட ஜீயர் ஸ்வாமிகள்) தனது விஜய யாத்ரையை 1956-ல் ஸ்ரீஅஹோபிலத்தில் தொடங்கி பத்ரிகாஶ்ரமம் வரை சென்று ஸ்ரீ அஹோபிலத்தில் பூர்த்தி செய்ய ஸங்கல்பித்து தொடங்கினார். மிகவும் கடுமையான ஸஞ்சாரம் செய்து பத்ரிகாஶ்ரமம் சென்று திரும்பும்பொழுது 1957-ல் நைமிசாரணயத்தில் அவருக்கு எம்பெருமான் பரமபதம் அளித்துவிட்டான். ஸ்ரீமத் தேவானார்விளாகம் அழகியசிங்கர் பரமபதித்தவுடன் அந்த அழகியசிங்கர் நியமனப்படி முக்கூர் ஸ்ரீ ராஜகோபாலாசார்யர் ஸ்வாமி 44ம் பட்டம் அழகியசிங்கராக ஸ்தானத்திற்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீமத் முக்கூர் அழகியசிங்கர் நைமிசாரண்யத்தில் அஹோபிலத்திலிருந்து எழுந்தருளிய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அங்கு ஒரு சன்னதியில் எழுதருளியிருந்ததை கடாக்ஷித்து அந்த இடத்தை ஸ்ரீமடத்திற்கு எழுதிக்கொடுக்கும்படி நியமித்தாயிற்று. அந்த ஸ்வாமியும் அப்படியே செய்தாயிற்று. அந்த இடத்தில் ஸ்ரீ தேவனார்விளாகம் ஸ்ரீமத் அழகியசிங்கருக்கு அழகிய ப்ருந்தாவனம் 1958-ல் நிறுவப்பட்டது. ஸ்ரீ தேவானார்விளாகம் அழகியசிங்கரின் ஸங்கல்பப்படி ஸ்ரீ அஹோபிலம் செல்லமுடியவில்லை. ஆனால்

எம்பெருமான் தன் அடியார்களின் ஸங்கல்பத்தை பூர்த்தி செய்ய திருவுள்ளம் பற்றி தானே அஹோபிலத்தில் உள்ளது போல் நவ நரஸிம்ஹர் சன்னதிகளாக ஸ்ரீமத் அழகியசிங்கருடைய ப்ருந்தாவனத்திற்கு எதிரில் உத்தர அஹோபிலம் என்று பெயர் சூட்டிக் கொண்டு எழுந்தருளிவிட்டான். இந்த கையங்கர்யத்தை ஸ்ரீமத் 46-ம் பட்டம் அழகியசிங்கர் மூலமாக நிறைவேற்றிக்கொண்டான். இங்கு எழுந்தருளியுள்ள நவ நரஸிம்ஹர்கள் ப்ரபாவத்தை ஸ்ரீப்ரஹ்மாண்ட புராணத்திலிருந்து நாம் அறிவோம்.

## நவ நரஸிம்ஹர் ப்ரபாவம்- (ப்ரும்ஹாண்ட புராணத்திலிருந்து)

### 1. ஜ்வாலா ந்ருஸிம்ஹர்:

a. எட்டு திருக்கைகள், ஹிரண்யனை இரண்டுகைகளால் மடியில் பிடித்துக்கொண்டு, இரண்டு கைகளால் அவன் வயிற்றை பிளந்து கொண்டு, இரண்டு கைகளால் வயிற்றிலிருந்து குடலை எடுத்து மாலையாய் போடுவது போலவும், இரண்டு கைகளால் சக்கரம், சங்கு ஏந்திக்கொண்டும் உக்ரமாய் சேவை ஸாதிக்கிறார்.

b. ஆனால் அவர் திருவடிக்குக்கீழே ஸ்ரீ ப்ரஹ்லாதன் கையைக்கூப்பிக்கொண்டு சேவிப்பதால் அவனை முன்னிட்டு அவனுக்கு அருளியது போல் நமக்கும் சாந்தமாக அருள் கொடுப்பவர்.

c. **அவரை சேவித்தால் வரும் பலன்:** இல்லாமையை அழிக்க வல்லது

d. கார்த்திகை மாதத்தில் ஜ்வாலா ந்ருஸிம்ஹருக்கு நெய்யிலோ அல்லது நல்ல எண்ணையிலோ திருவிளக்கு ஏற்றினவர்களுக்கு அழகு, ஒளி இவைகளோடு கூடியவர்களாய் ஸாயுஜ்யம் என்ற உயர்ந்த கதியை அடைகிறார்கள்

**ஹிரண்யஸ்தம்ப₄ஸம்பூ₄திப்ரக்₂யாத பரமாத்ருநே|**
**ப்ரஹ்லாதா₃ர்திமுஷே ஜ்வாலாநாரஸிம்ஹாய மங்க₃ளம்**

### 2. அஹோபில நரஸிம்ஹர்

a. அஹோபில குஹையில் ஹிரண்யனை மடியில் வைத்து இரண்டு கைகளால் அமுக்கிப்பிடித்துக்கொண்டு இருப்பது போல் சேவை ஸாதிக்கிறார்

b. ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திருவடிக்கீழே ஸ்ரீ ப்ரஹ்லாதன் கைகூப்பிக்கொண்டு நிற்கிறார்

c. முன்னொருகால் கோபிலர் என்ற மஹரிஷி துர்வாஸ முனிவரின் சாபத்திற்கு ஆளானார். அவர் அஹோபில ந்ருஸிம்ஹனை

குறித்து கடும் தபஸ் செய்தார். ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸந்தோஷப்பட்டு ப்ரத்யக்ஷமாகி அவருக்கு சிறந்த சாஸ்த்ர ஞானத்தை கொடுத்து அவருடைய இறுதிகாலத்தில் தன்னை வந்து அடைவாய் என்று அருளினார்.

d. **அவரை சேவித்தால் வரும் பலன்:** மிக உயர்ந்த ஸ்ரீ ந்ருஸிம்ஹ மந்த்ரத்தை தந்து அதை ஜபித்து நல்ல கதியை அடையச்செய்வார்

**க₃ருடா₃த்3ரிகு₃ஹாகே₃ஹே க₃ஜகுண்ட₃ஸரஸ்தடே|**

**ஹிரண்யஸ்தா₂ண்வஹம்காரஹாரி ஸிம்ஹாய மங்க₃ளம்||**

## 3. மாலோல நரஸிம்ஹர்

a. அஹோபில மலையில் கருடன் தபஸ் செய்தார். அவருக்கு ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ப்ரத்யக்ஷமாகி வரம் வேண்டும்படி கூறினார். ஸ்ரீ கருடனும் தனக்கு பெருமாள் தசாவதாரத்தையும் சேவிக்க வேண்டும் என்றார். ஸ்ரீ ந்ருஸிம்ஹனும் ஸ்ரீ கருடனிடம் இந்த க்ஷேத்ரம் ஸ்ரீ ந்ருஸிம்ஹ க்ஷேத்ரமானபடியால் 10 ந்ருஸிம்ஹனாக சேவை கொடுப்பதாக கூறி ஒன்பது ந்ருஸிம்ஹர்கள் மலையிலும் ஒரு ந்ருஸிம்ஹர் கீழேயும் சேவை கொடுத்தார். கருடனும் சேவித்து சந்தோஷப்பட்டார். பகவான் மேலும் வரங்கள் கேட்கும்படி கூறினார். ஸ்ரீ கருடனும் இந்த மலைக்கு கருடாத்ரி என்று பெயர் வைக்க வேண்டும் என்றும் தான் அவருக்கு எப்பொழுதும் வாஹனமாக இருக்க வேண்டும் என்று ப்ராத்தித்தார். பகவானும் அப்படியே ஆகட்டும் என்று கூறினார். இந்த மலைகளுக்கு அதனால் கருடாத்ரி என்று பெயர். அந்த மலைகளின் சிகரங்களில் ஒன்றான வேதாத்ரி என்ற சிகரத்தில் லக்ஷ்மீ க்ஷேத்ரம் உள்ளது. அதில் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் லக்ஷ்மியோடு ஸ்ரீ மாலோல லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனாக கோயில் கொண்டுள்ளார்

b. ஸ்ரீ மாலோல ந்ருஸிம்ஹன் திருவடியில் பாதுகை ஸாத்திக்கொண்டிக்கிறார் ஏனென்றால் அவர் கருடன் மேலே ஏறி உலகெங்கும் ஸஞ்சாரம் செய்வதற்காக. திருவடிக்கு கீழ் கருடனும் உள்ளார்

c. **அவரை சேவித்தால் வரும் பலன்:** உலகில் எவர்கள் ஐஸ்வர்யம் செல்வம் அல்லது தேவர்களுக்கெல்லாம் தலைவராக இருக்கும் தன்மை இவைகளை விரும்புகிறார்களோ அவர்கள் அஷ்டாக்ஷரத்தோடு கூடிய ந்ருஸிம்ஹ மந்த்ரத்தை ஆறு மாதகாலம் ஜபித்து ஹோம ப்ரஸாதத்தை சாப்பிடுகிறார்களோ

அவர்கள் விரும்புவதையும், அதிக செல்வத்தையும் அடைவார்கள்

**வாரிஜாவாரித ப₄யை: வாணீபதிமுகை₂ஸ்ஸுரை:।**

**மஹிதாய மஹோதா₃ர மாலோலாயாஸ்து மங்க₃ளம்॥**

## 4. க்ரோடா நரஸிம்ஹர்

a. ஸ்ரீ ந்ருஸிம்ஹ பகவான் வராஹவடிவங்கொண்டு ஸ்ரீ பூமாதேவி தாயாரை தன் தோளில் தூக்கிக்கொண்டு சேவை ஸாதிக்கிறார். வராஹ ரூபத்தில் ஸஹிரண்யாக்ஷனை வதம் செய்து பாதாளத்திலிருந்து பூமாதேவியை மேலே தூக்கி வருகிறார். பெருமாள் திருவடிக்குக் கீழ் பாதாளத்தில் உள்ள நாகதேவதை கைகூப்பி வணங்குகிறாள்

b. ஸ்ரீ பூமாதேவி தன்னை காப்பாற்றியதால் பெருமாளை ஸ்தோத்ரம் செய்கிறாள்

c. **அவரை சேவித்தால் வரும் பலன்** இந்த ஸ்தோத்ரத்தை ஒரு நிலைப்பட்ட மனதுடன் ஆறு மாத காலம் பாராயணம் செய்பவர்கள் விரும்பியவை அனைத்தும் பெறுவர். இந்த ஸ்தோத்ரம் பாராயணம் பண்ணுவதற்கு ஸௌகர்யமாக கீழே கொடுக்கப்படுகிறது.

நமஸ்தே ஸர்வரூபாய துப்₄யம் க₂ட்கத₄ராய ச ।
மாமுத்₃த₄ராஸ்மாத₃த்₃ய த்வம் த்வத்தோஹம் பூர்வமுத்தி₂தா ॥ 1

த்வத்தோஹமுத்தி₂தா பூர்வம் த்வன்மயாஹம் ஜனார்தன ।
ததா₂ந்யானி ச பூ₄தானி க₃க₃நாதீன்யஶேஷத: ॥ 2

நமஸ்தே பரமாத்மாத்மந் புருஷாத்மந் நமோஸ்து தே ।
ப்ரதா₄நவஸ்து பூ₄தாய காலபூ₄தாய தே நம: ॥ 3

த்வம் கர்தா ஸர்வபூ₄தாநாம் த்வம் பிதா த்வம் விநாஶக்ருத் ।
ஸ்வர்கா₃தி₃ஷு பரோ ப்₃ரஹ்மா விஷ்ணுருத்₃ராத்மரூப த்₄ருக் ॥ 4

ஸம்ப₄க்ஷயித்வா ஸகலம் ஜகத்யேகார்ணவீ க்ருதே ।
ஶேபே த்வமேவ கோ₃விந்த சிந்த்யமானோ மனீஷீபி:₄ ॥ 5

ப₄வதோ யத்பரம் ரூபம் தந்ந ஜானந்தி கேசந ।
அவதாரேஷு யத்₃ரூபம் தத₃ர்சந்தி தி₃வௌகஸ: ॥ 6

த்வமாராத்₃ய பரம் ப்₃ரஹ்மா யாதா முக்த்திம் முமுக்ஷவ: ।
வாஸுதே₃வமநாராத்₃ய கோமோக்ஷம் ஸமவாப்னுயாத் ॥ 7

யத்கிஞ்சிந்மனஸா க்₃ராஹ்யமக்₃ராஹ்யம் சக்ஷுராதி₃பி: ।
பு₃த்த₄யா ச யத்பரிஜ்ஞேயம் தத்ரூபமகி₂லம் தவ. ॥ 8

த்வந்மயாஹோ த்வதா3தா4ரா த்வத்ஸ்ருஷ்டா த்வமுபாஶ்ரிதா।
மாத4வீதி ச விஜ்ஞேயமபி4த்4த்தே ததோ ஹி மாம் ॥ 9

ஜயாகி2ல ஜகந்நாத ஜய ஸ்து2லமயாய ச ।
ஜயாநந்த மயாவ்யக்த ஜய வ்யக்த ஜய ப்ரபோ4 ॥ 10

பராவராத்மந் விஶ்வாத்மந் ஜய யஜ்ஞபதேsநக2 ।
த்வம் யஜ்ஞஸ்த்வ வஷட்கார ஸ்த்வமோம் காரஸ்தமக்3நய: ॥ 11

த்வம் வேதா3ஸ் த்வம் ஷடங்கா3நி த்வம் யஜ்ஞபுருஷோ ஹரே ।
ஸூர்யாத3யோ க்3ரஹாஸ்தாரா நக்ஷத்ராண்யகி2லம் ஜக3த் ॥ 12

மூர்தாமூர்தமத்3ருஶ்யம் ச த்3ருஶ்யம்ச புருஷோத்தம ।
யச்சோக்தம் யச்ச நைவோக்தம் மயோக்தம் பரமேஶ்வர ॥ 13

தத்ஸர்வம் த்வம் நமஸ்துப்4ய பூ4யோ பூ4யோ நமோ நம: ।
இத3ம் ஸ்தோத்ரம் ப4க3வதோ த4ரண்யா பரிகீர்திதம் ॥ 14

யே பட2ந்தி நரா லோகே ஶ்ராவயந்தி ச மாநவாந் ।
தே யாந்தி பரமாம் ஸித்3தி4ம் லப4ந்தே பார்தி2வம்ப2லம் ॥ 15

**வராஹகுண்டே3 மேதி3ந்யை வராஹார்த2ப்ரதா3யிநே।**
**த3ந்தலக்3ந ஹிரண்யாக்ஷ த3ம்ஷ்ட்ர ஸிம்ஹாய மங்க3ளம்॥**

## 5. காரஞ்ச நரஸிம்ஹர்

a. அஹோபிலத்தில் காரஞ்ச வ்ருக்ஷத்தின் கீழே எழுந்தருளி இருப்பதால் இவருக்கு காரஞ்ச நரஸிம்ஹர் என்று பெயர்.

b. ஹனுமானுக்கு சேவை ஸாதித்ததால் இடது கையில் வில்லை வைத்துக்கொண்டிருக்கிறார்.

c. **அவரை சேவித்தால் வரும் பலன்** திடமான ஞானம் வேண்டுபவர்களுக்கு இஷ்ட பலத்தை கொடுப்பார். ஸ்ரீ ஹனுமார் 'நவ வ்யாகரண பண்டிதரானது இவருடைய அனுக்ரஹத்தால் தான்.

**கோ3பூ4ஹிரண்யநிர்விண்ண கோ3பி4லஜ்ஞாநதா3யிநே।**
**ப்ரப4ஞ்ஜந ஶுநாஸீர ரஞ்ஜகாயாஸ்து மங்க3ளம்॥**

## 6. பார்கவ நரஸிம்ஹர்:

a. அஹோபிலத்தில் பார்கவ தீர்த்தத்திற்கு அருகில் பார்கவ நரஸிம்ஹர் எழுந்தருளி உள்ளார்.

b. ஹிரண்யனை மடியில் வைத்துக் கொண்டு இரண்டு கைகளால் அவனுடைய வயிற்றை பிளக்கிறார். மற்ற இரண்டு கைகளில் சக்கரம், சங்கு வைத்துள்ளார்.

c. திருவடியில் ஸ்ரீ ப்ரஹ்லாதன் கைகளைகூப்பிக்கொண்டு நிற்கிறார்.

d. இவருக்கு மேலே ப்ரபையில் தஶாவதார ரூபத்தை சேவிக்கலாம்

**e. அவரை சேவித்தால் வரும் பலன்** பார்கவ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து விட்டு ந்ருஸிம்ஹ ஸ்தோத்திரத்தால் துதித்து பக்தியுடன் பூஜை செய்பவர்கள் மிக உயர்ந்த நிலையை அடைவார்கள். தெளிந்த ஞானத்தையும் பெறுவார்கள்.

f. பலங்களை விரும்பி எவரெவர் ஸ்தோத்ரம் செய்து சேவிக்கிறார்களோ அவர்களனைவரையும் பகவான் அனுக்ரஹிக்கிறார்

g. வஸிஷ்டர் இந்த பெருமாளை பூஜித்து தம் பதவி பெற்றார்

**பா$_4$ர்க$_3$வாக்$_2$ய தபஸ்வீஶ பா$_4$வநா பா$_4$விதாத்மநே|**

**அக்ஷய்ய தீர தீரஸ்த$_2$ பா$_4$ர்க$_3$வாயாஸ்து மங்க$_3$ளம்||**

## 7. யோகானந்த நரஸிம்ஹர்:

a. யோகானந்த ந்ருஸிம்ஹர் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்ரம் யோக க்ஷேத்ரம்.

b. இந்த க்ஷேத்ரத்தில் அனேக யோகிகள், முனிவர்கள் தங்களின் யோக ஸித்தியை பெற்றனர்.

c. ப்ரஹ்மா மனக்கலக்கம் அடைந்த ஸமயத்தில் இந்த ந்ருஸிம்ஹனை ஆராதித்து மன அமைதி பெற்றார்.

**d. அவரை சேவித்தால் வரும் பலன்** மன அமைதி கிடைக்கும். அதை விட வேறு உயர்ந்தது என்ன உள்ளது?

**சதுராநந சேதோப்$_3$ஜ சித்ரபா$_4$நுஸ்வரூபிணே|**

**வேதா$_3$த்$_3$ரி க$_3$ஹ்வரஸ்தா$_2$ய யோகா$_3$நந்தா$_3$ய மங்க$_3$ளம்||**

## 8. சத்ரவட நரஸிம்ஹர்:

a. ஆல மரத்தடியில் எழுந்தருளியிருந்ததால் இவர் சத்ரவட நரஸிம்ஹர் என்று அழைக்கப்படுகிறார்

b. ஹாஹா, ஹூஹூ என்ற இரண்டு கந்தர்வர்கள் வானில் பாடிக்கொண்டு ஸஞ்சரிக்கும் பொழுது இந்த பெருமாள் இவர்கள் பாட்டை கேட்டு ஸ்ருதி சுத்தமாகவும் கால ப்ரமாண சுத்தமாகவும் இருப்பத்தை கண்டு தாளம் போட்டார். இதை பார்த்து அந்த கந்தர்வர்கள் இறங்கி வந்து அந்த பெருமாள் முன்பு பாடினார்கள்,

c. அவர்களை பெருமாள் உலகிலேயே சிறந்த பாடகர்கள் என்று போற்றப்படுவர்கள் என்று அனுக்ரஹம் செய்தார்.

**d. அவரை சேவித்தால் வரும் பலன்** சேவிப்பவர்கள் இசையில் உலகப் புகழ் பெற்றவர்களாக திகழ்வர்கள்

**ஹாஹாஹூஹ்வாக்₂ய க₃ந்த₄ர்வந்ரு'த்த கீ₃த ஹ்ரு'தாத்மநே।**

**ப₄வஹந்த்ரு'தடச்ச₂த்ரவட ஸிம்ஹாய மங்க₃ளம்॥**

## 9. பாவன நரஸிம்ஹர்:

a. உலகமனைத்தையும் தூய்மை படுத்தவல்ல பெருமாள் எழுந்தருளியிருப்பதால் இந்த இடம் பாவன க்ஷேத்திரம் எனப்படுகிறது

b. பரத்வாஜ மஹரிஷி ப்ரஹ்மஹத்தி தோஷத்தை இந்த பெருமாளை தர்சித்து போக்கிக்கொண்டார்.

**c. அவரை சேவித்தால் வரும் பலன்** இந்த பெருமாளை சேவிப்பவர்களுக்கு எப்பேர்பட்ட பாபங்களும் விலகும்

**பா₄ரத்₃வாஜமஹாயோகி₃ மஹாபாதக ஹாரிணே।**

**தாபநீய ரஹஸ்யார்த₂ பாவநாயாஸ்து மங்க₃ளம்॥**

## 10. தன்வந்த்ரி பகவான்

a. ஸ்ரீ தேவனார் விளாகம் அழகியசிங்கர் 1957-ல் நைமிசாரண்யத்திற்கு எழுந்தருளிய பொழுது திருமேனியில் நோவு ஏற்பட்டது. அப்பொழுது அவருக்கு வைத்யம் செய்ய முயன்ற பொழுது, அவர் பெருமாள் தான் வைத்யர் என்றும் பெருமாள் தீர்த்தம்தான் மருந்து என்றும் கூறி எந்த வைத்யமும் வேண்டாம் என்று மறுத்துவிட்டார். அந்த விஷயத்தை நினைவு கூறும் வகையில் ஸ்ரீ தன்வந்த்ரி பகவானுக்கு ஒரு ஸன்னதி ஏற்பட்டிருக்கிறது.

**b. அவரை சேவித்தால் வரும் பலன்** இந்த பெருமாளை சேவிப்பவர்களுக்கு ஸகல வ்யாதிகளும் நீங்கும்

c. மேலும் பிறவி என்னும் நோயும் நீங்கி மோக்ஷம் கிடைக்கும்

**ஓம் நமோ ப₄க₃வதே வாஸுதே₃வாய த₃ந்வதரயே,**
**அம்ருதகலஶஹஸ்தாய, ஸர்வாமயவிநாஶாய,**
**த்ரைலோக்ய நாதா₂ய, ஸ்ரீமஹாவிஷ்ணவே நம:**

## 11. தாயார் / ஆண்டாள் ஸன்னதி

a. உத்ஸவர் தாயார், ஆண்டாளுக்கு ஒரு சின்ன சன்னதியும் உள்ளது

b. பெருமாள் அவதாரங்கள் எடுக்கும் பொழுது தாயாரும் அவதாரம் செய்வார். ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாயார் அஹோபிலத்தில் " செஞ்சு" என்ற வேடர் குலத்தில் பிறந்து ஸ்ரீ ந்ருஸிம்ஹனை மணம் புரிந்தார். ஸ்ரீ செஞ்சு லக்ஷ்மிதாயார் உத்ஸவரூபத்தில் சேவை ஸாதிக்கிறார்.

c. ஸ்ரீ ஆண்டாள் எல்லா ஸ்ரீ வைஷ்ணவகோயில்களிலும் அவசியம் இருப்பார். இங்கும் உத்ஸவமூர்த்தியாக ஸ்ரீ செஞ்சு லக்ஷ்மிதாயாருடன் எழுந்தருளியுள்ளார்

**d. அவர்களை சேவித்தால் வரும் பலன்:** எல்லா மங்களங்களும், ஐஸ்வர்யமும் கிடைக்கும்

**ஓம் மஹாதே₃வ்யைச வித்₃மஹே விஷ்ணு பத்ந்யை ச தீ₄மஹி தந்நோ லக்ஷ்மீ: ப்ரசோத₃ யாத்**
**ஓம் த₄னுர்த₄ராயை வித்₃மஹே விஷ்ணு பத்ந்யை ச தீ₄மஹி தந்நோ த₄ரா: ப்ரசோத₃ யாத்**

## 12. கருடன் ஸன்னதி

a. ஸ்ரீ மாலோலன் ஸன்னதிக்கு எதிரில் கருடன் சன்னதி உள்ளது

b. கருடன் பெருமாளிடம் எப்பொழுதும் அவர் கோயில் கொண்ட இடமெல்லாம் எதிரில் இருக்க வேண்டும் என்று வரம் பெற்றுள்ளார்.

**c. அவரை சேவித்தால் வரும் பலன்:** எல்லா கஷ்டங்களும் நீங்கி ஸகல க்ஷேமங்களும் உண்டாகும்

**ஓம் தத் புருஷாய வித்₃மஹே ஸுவர்ண பக்ஷாய தீ₄மஹி தந்நோ கருட: ப்ரசோத₃யாத்**

## 13. ஆழ்வார் / ஆசார்யர்கள் ஸன்னதி

a. ஆழ்வார் ஆசார்யர்களுக்கு ஒரு சின்ன சன்னதியும் உள்ளது. அதில் ஸ்ரீ விஷ்வக்ஸேனர், நம்மாழ்வார், கலியன்-குமுதவல்லி நாச்சியார், பாஷ்யகாரர், ஸ்வாமிதேசிகன், ஸ்ரீமத் ஆதிவண் சடகோபர், 44ம் பட்டம் அழகியசிங்கர், 45ம் பட்டம் அழகியசிங்கர், 46ம் பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர்களின் உத்ஸவவிக்ரஹங்கள் வைக்கப்பட்டு உள்ளது

**b. அவரை சேவித்தால் வரும் பலன்:** ஆசார்யர்களின் அனுக்ரஹம் இருந்தால் கிடைக்காது என்று ஒன்றும் இல்லை. ஸகல பலன்களும் கிடைக்கும்

**என்னுயிர் தந்து அளித்தவரைச் சரணம்புக்கு|**
**யானடைவே அவர் குருக்கள் நிரைவணங்கிப்|**

**பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்।**

**பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால்நம்பி।**

**நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக்கொண்டார்।**

**நாதமுனி சடகோபன் சேனைநாதன்।**

**இன்னமுதத் திருமகளென்று இவரை முன்னிட்டு।**

**எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.।**

## 14. ஸ்ரீமத் அழகியசிங்கர் ப்ருந்தாவனம்

a. இந்த க்ஷேத்ரத்தில் ஸ்ரீமத் 43-ம் பட்டம் ஸ்ரீ தேவனார்விளாகம் அழகியசிங்கரின் ப்ருந்தாவனம் உள்ளது

b. இந்த ப்ருந்தாவனம் 1958-ல் ஸ்ரீ 44-ம் பட்டம் அழகியசிங்கரால் கட்டப்பட்டு 2001-ல் ஸ்ரீ 45-ம் பட்டம் அழகியசிங்கரால் பழுது பார்கப்பட்டு 2021-ல் ஸ்ரீ 46-ம் பட்டம் அழகியசிங்கரால் புதுபிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் உள்ளது

c. **அவரை சேவித்தால் வரும் பலன்** இந்த ப்ருந்தாவனத்தில் ஸ்ரீமத் அழகியசிங்கரை ஸேவித்து 4 முறை ப்ரதக்ஷிணம் பண்ணினால் ஸகல மனோரதங்களும் கை கூடும்

**श्रीमच्छ्रीरङ्गपृथ्वीश्वरशठरिपुणा संयमीन्द्रेण दृष्टं**

**न्यस्तात्मानं नृसिंहे नरहरिशठजिद्योगिनेतुः प्रसादात्।**

**प्राज्ञश्रीरङ्गकारिप्रभवयतिपतेः प्राप्रलक्ष्मीनृसिंहा-**

**स्थानं सेवे यतीन्द्रं सकलगुणनिधिं वीररघ्वीट् शठारिम्।।**

## 15. ஸுதர்ஶன பகவான்

a. நைமிசாரண்யத்தில் சக்ர தீர்த்தம் என்ற குளம் உள்ளது. அதில் அமாவாசை அன்று ஸகல புண்ய தீர்த்தங்களும் சேருகின்றது என்று ஸ்தல புராணம் கூறுகிறது

b. முன் ஒரு ஸமயத்தில் மஹரிஷிகள் பெருமாளிடம் தங்களுக்கு மனதை அடக்கி தபஸ் செய்ய ஒரு நல்ல இடத்தை காட்டவேண்டும் என்று ப்ரார்தித்தனர். எம்பெருமானும் தர்பத்தால் ஒரு சக்கரம் செய்து அதை உருட்டி விட்டார். அது ஒரு காட்டில் விழுந்தது. அந்த க்ஷேத்ரத்திற்கு நைமிச அரண்யம் (நேமி என்றால் சக்கரம் – அது விழுந்த காடு – நைமிசாரண்யம்) என்று பெயர் ஏற்பட்டது.

c. இங்கு வன ரூபத்தில் பெருமாள் எழுந்தருளியிருப்பதால் மஹரிஷிகளுக்கு தபஸ் செய்ய மிகவும் சௌகர்யமாக இருந்தது

d. அந்த சக்கரம் விழுந்த இடத்தில் குளம் ஏற்பட்டு ரிஷிகளுக்கு அனுஷ்டானத்திற்கு சௌகர்யமாக இருந்தது, அந்த குளத்திற்கு சக்ர தீர்த்தம் என்று பெயர் ஏற்பட்டது

e. நைமிசாரண்யத்தில் எல்லா ரிஷிகளும் தபஸ் செய்தனர். இங்குதான் எல்லா புராணங்களும் ஸ்ரீ வ்யாஸ பகவானால் சொல்லப்பட்டது.

f. ரிஷிகள் புண்யதீர்த்தங்களில் தீர்த்த யாத்திரை மேற்கொண்டால் இந்த இடத்தை விட்டு போகவேண்டுமே. அவர்களுக்கு இந்த இடத்தை விட்டு போக மனமில்லை ஏனென்றால் தபஸ் செய்ய சிறந்த இடமாக இருப்பதால். எனவே மறுபடியும் எம்பெருமானிடம் அதற்கு ஒரு வழி பண்ணவேண்டும் என்று ரிஷிகள் ப்ரார்த்தித்தனர்

g. பெருமாளும் இங்கு உள்ள க்ராம தேவதை ஸ்ரீ லலிதா தேவி அம்மனை அமாவாசை அன்று எல்லா புண்ய தீர்த்தங்களையும் இங்குள்ள சக்ர தீர்த்ததில் கொண்டு சேர்க்கும்படி நியமித்தார்.

h. அப்படியே எல்லா அமாவாசையிலும் சக்ர தீர்த்தத்தில் தீர்த்தாமாடினால் எல்லா புண்யதீர்தங்களிலும் தீர்த்தாமாடிய பலன் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

i. இப்படி மஹாத்மியம் உள்ள இந்த சக்ர தீர்த்த க்ஷேத்ரத்தில் ஸ்ரீ சக்ரத்தாழ்வாருக்கு ஒரு சன்னதி வேண்டும் என்று ஸ்ரீ காஞ்சீபுரத்தில் உள்ளது போல் ஒருபெரிய ஸுதர்ஶனர் சன்னதி இந்த நவ நரஸிம்ஹர் வளாகத்தில் அமைந்துள்ளது

j. ஸ்ரீ ஸுதர்ஶநர் 16 திருக்கைகளுடன் அழகாக சேவை ஸாதிக்கிறார். அவருடைய ஜ்வாலை வளையத்தில் ஸ்ரீ விஜயவல்லித்தாயார் உள்ளார்

k. பின் புறத்தில் யோக ந்ருஸிம்ஹர் 4 சக்ரங்களுடன் சேவை ஸாதிக்கிறார்.

l. உத்ஸவமூர்த்தி பெரியவராக எழுந்தருளியுள்ளார். அவருடைய ஜ்வாலை வளையத்திற்குள் அறு கோணத்தில் உள்ளிலும் வெளியிலும் 12 ஸுதர்ஶன மூர்த்திகளை சேவிக்கலாம்

m. **அவரை சேவித்தால் வரும் பலன்** இந்த பெருமாளை ஸ்ரீ ஸுதர்ஶனாஷ்டகம் சொல்லிக்கொண்டு ப்ரதக்ஷிணம் செய்து சேவித்தால் எல்லா தடைகளும் நீங்கி நினைத்த காரியங்கள் சித்தி கிடைக்கும்

**ஓம் ஸுத$_3$ர்ஶனாய வித்$_3$மஹே ஹேதிராஜாய தீ$_4$மஹி**
**தந்நஶ் சக்ர: ப்ரசோத$_3$யாத்**
**வஜ்ரனகாய வித்$_3$மஹே தீக்ஷ்ணத$_3$ம்ஷ்ட்ராய தீ$_4$ மஹி**
**தந்நோ நாரஸிம்ஹ ப்ரசோத$_3$யாத்**

## 16. ஹனுமான் ஸன்னதி

a. ஸ்ரீ ஹனுமான் மூன்று இடங்களில் பிரஸித்தியாக ஸ்வயமாஹவே எழுந்தருளியுள்ளார்

b. நைமிசாரண்யத்தில் நின்று கொண்டும், அயோத்யையில் உட்கார்ந்துகொண்டும், ப்ரயாக்ராஜில் சயனித்துக்கொண்டும் உள்ளார்.

c. ஆகையால் நவ நரஸிம்ஹர் வளாகத்தில் ஸ்ரீ ஆஞ்சனேயருக்கு அழகிய ஸன்னதி உள்ளது.

d. ஸ்ரீ ஆஞ்சனேயர் நவ நரஸிம்ஹர்களையும் சேவிப்பது போல் எதிரில் கைகூப்பியபடி சேவை ஸாதிக்கிறார்.

e. **அவரை சேவித்தால் வரும் பலன்:** நல்ல ஞானம், பலம், புகழ், தைர்யம், பயமின்மை, நல்ல வாக்கு எல்லாம் உண்டாகும்

**ஓம் வாயு புத்ராய வித்₃மஹே ராமதூ₃தாய தீ₄மஹி**
**தந்நோ ஹனுமத் ப்ரசோத₃யாத்**

## 17. வ்யாஸ பகவான் ஸன்னதி

a. ரிஷிகளின் தபோவனமாக திகழும் நைமிசாரணயத்தில் வ்யாஸ பகவானுக்கு ஒரு அற்புதமான சன்னதி அமைந்துள்ளது.

b. அதில் வஸிஷ்டர், அவருடைய குமாரர் சக்தி, சக்தியின் குமாரர் பராஶரர், பராஶரர் குமாரர் வ்யாஸர், வ்யாஸர் குமாரர் சுகர் என்று ஐந்து ரிஷிகள் சேவை ஸாதிக்கிறார்கள்

c. இந்த மாதிரி சன்னதி வேறு எங்கும் கிடையாது

d. **அவரை சேவித்தால் வரும் பலன்:** நல்ல ஞானம், ஸத்வ குணம், ஆஸ்திக ஈடுபாடு ஏற்படும்

**வ்யாஸம் வஸிஷ்ட₂நப்தாரம் ஶக்தே: பௌத்ரமகல்மஷம்**
**பராஶராத்மஜம் வந்தே₃ ஶுகதாதம் தபோநிதி₄ம்**
**வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே**
**நமோவை ப்₃ரஹ்ம நித₄யே வாஸிஷ்டா₂ய நமோ நம:**

## மேலும் இந்த நவ நரஸிம்ஹர் கோயிலில் உள்ள விசேஷங்கள்

1. ப்ரதான ஸன்னதியை சுற்றி உள்ள 8 தூண்களில் 32 நரஸிம்ஹ ரூபங்களின் சிற்பங்கள் உள்ளது. அவைகளின் விபரம்

| வ. எண் | நரசிம்ஹ ரூபம் | வ. எண் | நரசிம்ஹ ரூபம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ திவ்ய ஸிம்ஹ மூர்த்தி | 8 | ஸ்ரீ வாஸுதேவ நரசிம்ஹ மூர்த்தி |
| 2 | ஸ்ரீ ஜ்வாலா நரசிம்ஹ மூர்த்தி | 9 | ஸ்ரீ விபீஷண ஸிம்ஹ மூர்த்தி |
| 3 | ஸ்ரீ ரக்ஷாப்ரதான அஷ்டபுஜ நரசிம்ஹ மூர்த்தி | 10 | ஸ்ரீ ஹயக்ரீவ நரஸிம்ஹ மூர்த்தி |
| 4 | ஸ்ரீ பீஷண நரசிம்ஹ மூர்த்தி | 11 | ஸ்ரீ புச்ச நரஸிம்ஹ மூர்த்தி |
| 5 | ஸ்ரீ விஷ்ணு ஸிம்ஹ மூர்த்தி | 12 | ஸ்ரீ பால ஸிம்ஹ மூர்த்தி |
| 6 | ஸ்ரீ அஷ்டபுஜ நரசிம்ஹ மூர்த்தி | 13 | ஸ்ரீ ஜய ஸிம்ஹ மூர்த்தி |
| 7 | ஸ்ரீ யோக நரசிம்ஹ மூர்த்தி | 14 | ஸ்ரீ சுதர்சன நரஸிம்ஹ மூர்த்தி |

| வ. எண் | நரசிம்ஹ ரூபம் | வ. எண் | நரசிம்ஹ ரூபம் |
|---|---|---|---|
| 15 | ஸ்ரீ தரோதர நரஸிம்ஹ மூர்த்தி | 24 | ஸ்ரீ கபில நரஸிம்ஹ மூர்த்தி |
| 16 | ஸ்ரீ பயங்கர ஸிம்ஹ மூர்த்தி | 25 | ஸ்ரீ பூமி ஸஹித நரஸிம்ஹ மூர்த்தி |
| 17 | ஸ்ரீ ஸர்வதோமுக நரஸிம்ஹ மூர்த்தி | 26 | ஸ்ரீ பீம நரஸிம்ஹ மூர்த்தி |
| 18 | ஸ்ரீ வீர லக்ஷ்மீ நரஸிம்ஹ மூர்த்தி | 27 | ஸ்ரீ அஷ்டபுஜ லக்ஷ்மீ நரஸிம்ஹ மூர்த்தி |
| 19 | ஸ்ரீ ஜ்வாலா விதாரண நரஸிம்ஹ மூர்த்தி | 28 | ஸ்ரீ குக்ஷி நரஸிம்ஹ மூர்த்தி |
| 20 | ஸ்ரீ வராஹ நராஸிம்ஹ மூர்த்தி | 29 | ஸ்ரீ பஞ்சவக்த்ர நரஸிம்ஹ மூர்த்தி |
| 21 | ஸ்ரீ ரௌத்ர ஸிம்ஹ மூர்த்தி | 30 | ஸ்ரீ சதுர்புஜ நராஸிம்ஹ மூர்த்தி |
| 22 | ஸ்ரீ ரக்ஷஸ நராஸிம்ஹ மூர்த்தி | 31 | ஸ்ரீ ஆவிர்பூத நரஸிம்ஹர் |
| 23 | ஸ்ரீ அதோமுக நராஸிம்ஹ மூர்த்தி | 32 | ஸ்ரீ செஞ்சுலக்ஷ்மீ ஸமேத நரஸிம்ஹர் |

2. **நடுவில் வரும் 12 தூண்களில் ஒருபுறம் க்ருஷ்ண லீலா சிற்பங்கள்-** மதுராவில் ஸ்ரீ க்ருஷ்ண ஜனனம், யமுனைதாண்டுதல், நந்தன் க்ருஹத்தில் விடுதல், ஸ்ரீ க்ருஷ்ண ஜனன கொண்டாட்டம், நவனீத சோரம், மண்சாப்பிட்ட வாயில் ப்ரம்ஹாண்ட தர்சனம், காளிங்க நர்த்தனம், கோபிகைகள் விளையாட்டு, ராஸக்ரீடை, கோவர்தனத்தை தூக்குதல், ராதா கிருஷ்ணன்
3. **நடுவில் வரும் 12 தூண்களில் இரண்டாவதாக ஆழ்வார்கள் சிற்பங்கள்**. - பொய்கைஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், மதுரகவிகள், பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடிஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார் (குமுதவல்லியுடன்)
4. **நடுவில் வரும் 12 தூண்களில் மூன்றாவதாக துவாதச ரூபங்கள் -** கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுஸூதன, திரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷீகேச, பத்மனாப, தாமோதர ரூபங்கள்
5. **நடுவில் வரும் 12 தூண்களில் நாலாவதாக வ்யூஹ அர்ச்சா ரூபங்கள்-** வாஸுதேவ, ப்ரத்யும்ன, அனிருத்த, ஸங்கர்ஷண என்கிற வ்யூக ரூபங்கள்- ஸ்ரீ க்ஷீராப்தி நாதன், ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவன், ஸ்ரீ லக்ஷ்மீ வராஹன், ஸ்ரீ வீரராகவன், ஸ்ரீ ஸ்ரீனிவாஸன், ஸ்ரீ விட்டல் ருக்குமாயீ, ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணன், ஸ்ரீ வைகுண்டநாதன் என்கிற அர்ச்சா ரூபங்கள்
6. **உள் சுவற்றில் வரும்தூண்களில் ஸ்ரீமத் ராமாயண காட்சிகள்-** புத்ரகாமேஷ்டி யாகம். ஸ்ரீ ராம ஜனனம், யாக ஸம்ரக்ஷணம், அகல்யா சாப விமோசனம். சீதா கல்யாணம், குஹன் ஸஹ்யம், பாதுகா பட்டாபிஷேகம், சூர்பணகா பங்கம், கரதூஷன வதம், மாயமான் வேண்டல், சீதாஅபஹரணம்- ஜடாயு யுத்தம், சுக்ரீவ ஸஹ்யம், அங்குலீய ப்ரதானம், விபீஷண சரணாகதி, ராவண வதம். ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்

7. **இதர சிற்பங்கள்**: இந்த சிற்பங்கள் தவிர எல்லா தூண்களின் கீழ் பகுதிகளில் நான்கு புறங்களிலும் த்வார பாலகர்கள், இசை வாத்யங்கள், நர்தன பெண்கள், சாமரம் வீசும் பெண்கள், மிருகங்கள், பக்ஷிகள், முதலிய சிற்பங்கள் உள்ளன. தூண்களில் மேலே உள்ள நான்கு புறங்களிலும் திருமண், பலவித மலர்கள், அஷ்ட மங்கள சிற்பங்களுள்ளன.
8. **மண்டபத்தில் உள்ளே 46 அழகியசிங்கர்களின் சிற்பங்கள்-** சிற்பங்களின் கீழே ஸ்ரீமத் அழகியசிங்கர்களின் வைபவ குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது.
9. **அஷ்ட லக்ஷ்மி சிற்பங்கள்:-** கோயில் அமைந்துள்ள மண்டபத்தை சுற்றி வரும் வெளிப்புற (பக்கவாட்டில் உள்ள) சுவரில் 7அடிக்கு 4 அடி அளவில் அஷ்ட லக்ஷ்மிகளின் சிற்பங்கள்
10. **தசாவதார சிலைகள்**: வெளிப்புற பின் பக்கம் அமைந்துள்ள சுவரில் மாடங்களில் 4 அடி உயர தசாவதார சிலைகள் வைக்கப்பட்டுள்ளது.
11. **தூண்களில் சிம்மங்கள்**: வெளிப்புற சுவரில் இருக்கும் 20 தூண்களில் 24 சிங்கங்கள் உள்ளன. அவைகள் ஒவ்வொன்றும் 6 அடி நீளத்தில் இருக்கின்றன.
12. **மூன்று சரித்ரங்கள்** ப்ராகார சுவரில் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளது.
    i. கிழக்கு பக்கத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹ சரித்திரம் 17 காட்சிகளாக வைக்கப்பட்டுள்ளது. -(அவைகளாவன 1. த்வாரபாலகர்கள் ஜய, விஜய இருவரும் சனகாதிகள் முனிவரை வைகுண்டத்தில் புகாமல் தடுத்தல், 2. அதனால் அவர்கள் பூலோகத்தில் பிறக்க சாபம் பெறுதல், 3. அவர்கள் ஹிரண்யாக்ஷனாகவும் ஹிரண்யணாகவும் ஆனது, 4. ஹிரண்யாக்ஷனை வராஹப்பெருமான் வதம் செய்தல், 5. ஹிரண்யன் தவம் செய்து அழியா வரம் வேண்டுதல், 6. அந்த ஸமயத்தில் ஹிரண்யனின் மனைவி கர்பமாக இருந்தாள் ஸ்ரீ நாரதமுனியிடம் வசித்து வந்ததால் பெருமாளைப் பற்றி உபதேசங்களை அவளும் அவள் வயிற்றில் சிசுவும் கேட்டல், ஸ்ரீ ப்ரஹ்லாதன் ஜனனம், ஹிரண்யன் தவம் முடிந்து அவர்களை அழைத்துசெல்லுதல், 7. ஸ்ரீ ப்ரஹ்லாதனை குருகுலம் அனுப்புதல், குருகுலத்தில் ஸ்ரீ ப்ரஹ்லாதன் பகவத் கதைகளை மற்ற குழந்தைகளுக்கு சொல்லுதல், 8. குரு ஸ்ரீ ப்ரஹ்லாதனை ஹிரண்யனை பற்றி சொல்ல வற்புறுத்தல் அவன் மறுத்தல், 9. ஸ்ரீ ப்ரஹ்லாதன் சொல்வதை கேட்ட ஹிரண்யன் கோபம் கொள்ளுதல், 10. அவனை மலையிலிருந்து தள்ளுதல், 11. அவனுக்கு விஷம் கொடுத்தல், யானையையிட்டு இடரச்சொல்லுதல்,

12. ஸமுத்தரத்தில் தள்ளுதல்,13. பாம்பை விட்டு கடிக்க செய்தல், 14. நெருப்பில் தள்ளுதல், 15 தூணை பிளத்தல் – ஸ்ரீ ந்ருஸிம்ஹன் அவதாரம், 16. ஹிரண்ய ஸம்ஹாரம், 17. ஸ்ரீ ப்ரஹ்லாதனுக்கு அனுக்ரஹம்

ii. பின் பக்கத்தில் ஸ்ரீமத் ஆதிவண்சடகோபன் சரித்திரம் 18 காட்சிகளாக வைக்கப்பட்டுள்ளது - ( அவைகளாவன 1 . திரு நாராயணபுரத்தில் (மேல்கோட்டையில்) ஸ்வாமியின் அவதாரம், 2. காஞ்சீபுரத்தில் சின்ன அம்மாளிடம் வாசித்தல், 3. காஞ்சீபுரத்தில் சின்ன அம்மாளிடம் அஹோபிலம் பெருமாள் பற்றி அறிதல், 4. ஸ்ரீ அஹோபிலம் பெருமாள் கனவில் தோன்றி ஸ்வாமியை அஹோபிலம் வர நியமித்தல், 5. ஸ்வாமி ஸ்ரீ அஹோபிலத்தில் பெருமாளின் நியமனப்படி ஸன்யாசம் ஏற்றுக் கொண்டு சடகோப ஜீயராகுதல், 6. ஸ்ரீ மலோலன் ஸ்வாமியின் திருக்கரத்தில் எழுந்தருளி கிராமம் கிராமமாக சென்று ஸநாதன தர்மத்தை பரிபாலிக்க நியமித்தல், 7. அஹோபில நவ நரஸிம்ஹர்கள் மங்களாசாஸனம், 8. ஸ்வாமி ஆழ்வார் திருநகரி எழுந்தருளுதல் ஆனால் கோவிலில் ஆழ்வாரைக் காணாமல் த்யானம் செய்து ஆழ்வாரை கண்டுபிடித்தல், 9. ஆழ்வாரை திருக்கோவிலில் எழுந்தருளப்பண்ணியதால் ஸ்வாமிக்கு "ஆதி" "வண்" என்ற பட்டமும் பெற்று ஆதிவண் சடகோப ஜீயராகுதல், 10. ஸ்ரீ ரங்கத்தில் தசாவதார சன்னதி கட்டியது, 11. ஸ்ரீ ரங்கத்தில் உள்-தேசிகன் சன்னதி கட்டியது, 12. சோளிங்கர் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் சன்னதியை ஸ்ரீ தொட்டையாசார்யர் ஸ்வாமியிடம் ஒப்படைத்து பராமரிக்க நியமித்தல், 12. திருமலைக்கு சோபானம் கட்டுதல், 13. திரு நாராயணபுரத்தில் கோபுரம் கட்டுதல், 14. காஞ்சீபுரத்தில் 100 க்கால் மண்டபம் கட்டுதல், 15. விஜய நகர் அரசன் ஸ்வாமியிடம் ஆஶ்ரயித்தல், 16. ஸ்ரீ மணவாள மாமுனிகளுக்கு ஸன்யாசம் கொடுத்தல், 17. 2-ம் பட்டம் அழகியசிங்கரை நியமித்தல், 18, மேல்கோட்டையில் ஸ்வாமி ப்ருந்தாவனம்.)

iii. மேற்கே ப்ருந்தாவனம் பக்கத்தில் ஸ்ரீமத் தேவனார்விளாகம் அழகியசிங்கர் சரித்திரம் 20 காட்சிகளாக வைக்கப்பட்டுள்ளது- ( அவைகளாவன 1 . தேவனார்விளாகத்தில் ஸ்வாமியின் அவதாரம், 2. சிறு வயதிலேயே பகவத் பக்தியில் ஈடுபாடு, 3. தந்தையிடம் வாசித்தல், 4. ஸ்வாமியின் திருக்கல்யாணம், 5. திருவையாறு ஸம்ஸ்க்ருத கல்லூரியில் சிரோமணி வாசித்தல், 6. ஸ்ரீமத் 40-41ம் பட்டம் அழகியசிங்கரிடத்தில் காலக்ஷேபம் செய்தல், 7. பிறருக்கு காலக்ஷேபம் சொல்லுதல், 8. மதுராந்தகம் கல்லூரியில் (PRINCIPAL) முதல்வராக இருத்தல், 9. திருவள்ளூரில் சின்ன அழகியசிங்கராக ஆஶ்ரம ஸ்வீகாரம், 10. பெரிய -சின்ன

அழகியசிங்கர்கள் காலக்ஷேபம் ஸாதித்தல், 11. 43-ம் அழகியசிங்கராக பட்டாபிஷேகம், 12. திருவள்ளூரில் ஸ்ரீ வீரராகவன் மங்களாசாஸனம், 13. பெருமாள் ஸஞ்சாரம் கிளம்புதல், 14. ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸஞ்சாரம் கிளம்புதல், 15. மும்பை ஸஞ்சாரம், 16. ரிஷிகேஶம் ஸஞ்சாரம், 17. பத்ரிகாஶ்ரமம் ஸஞ்சாரம், 18. டில்லி ஸஞ்சாரம், 19. நைமிசாரண்யத்தில் திரு நாடு அலங்கரித்தல், 20. 44ம் பட்டம் அழகியசிங்கர் அவதாரம்.)

iv. ஒவ்வொரு காட்சிகளுக்கும் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து அவர்களுடைய சரித்திரத்தை அறிந்து கொள்ளலாம்.

இந்த கோயிலில் நடக்கும் உத்ஸவங்களுக்கும் மற்றும் நித்யபடி சேவைகளுக்கும் பங்கு கொள்ள விரும்பும் பக்தர்கள் உபயம் செலுத்தி ஸ்ரீ மாலோலன் அனுக்ரஹத்திற்கும் ஸ்ரீமத் அழகியசிங்கர் க்ருபைக்கும் பாத்திரர்கள் ஆகும்படி ப்ரார்த்திக்கிறோம்.

இந்த புஸ்தகத்தில் ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ வேதாந்த யதீந்த்ர மஹாதேஶிகன் (ஸ்ரீமத் முக்கூர் அழகியசிங்கர்) அனுக்ரஹித்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ப்ரபத்தி, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ கராவலம்ப ஸ்தோத்ரம், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஹன் மங்களம் ஆகிய ஸ்தோத்ரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை தினந்தோறும் பாராயணம் செய்தால் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய பரிபூர்ண அனுக்ரஹத்திற்கு ஆளாகி ஸகல க்ஷேமங்களையும் அடையலாம்.

**DR S PADMANABHAN**
**SRIKARYAM**
**SRI AHOBILAMUTT**

**S SARANATHAN**
**MANAGING TRUSTEE**
**NYMISARANYAM AZHAGIYASINGAR CHARITABLE TRUST**
**CONTACT NO. 9867550318 / 9867550316_**

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ ஸ்ரீ லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹகராவலம்ப$_3$ஸ்தோத்ரம் ॥

துஷ்ட்யை ஸதா$_3$ ப$_4$க$_3$வதஶ்சரணாரவிந்த$_3$ -
    த்$_3$வம்த்$_3$வாவலம்ப$_3$விப$_4$வம் தவ மேऽத்$_3$ய தே$_3$ஹி ।
ஸ்துத்யை முகுந்த$_3$ ஸுகு$_3$ணார்ணவஸர்வபோ$_4$க்$_3$ய
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **1** ॥

ஸ்ரீதாபநீயவிதி$_3$தாத்மமஹாப்ரபா$_4$வ
    லக்ஷ்மீஸமேத சதுராநநருத்$_3$ரமுக்$_2$யை: ।
ஸம்ஸேவ்யமாநசரணாம்பு$_3$ஜ ப$_4$க்தபோ$_4$க்$_3$ய
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **2** ॥

யத்$_3$வத்ஸ ஸாது$_4$ படி$_2$தம் கத$_2$யேதி புத்ரம்
    ப்ரு’ச்ச$_2$த்யஹோ பிதரி நாமகு$_3$ணாநுவாத$_3$: ।
விஷ்ணோரிதி ப்ரதிவத$_3$ந்தமபாலயஸ்த்வம்
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **3** ॥

ஸம்தீ$_3$பிதாக்$_3$நிவிநிபாதிததைத்$_3$யடி$_3$ம்ப$_4$ -
    ஸம்ரக்ஷணாய விநிவர்திதவஹ்நிஶக்தே ।
ப$_4$க்தாய தா$_3$ருபரிகல்பிதபத்$_3$மதல்ப
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **4** ॥

ப்ரஹ்லாத$_3$நாஶபரிசோதி$_3$தஸர்பஜாத -
    சூடா$_3$மணிப்ரவரத$_3$ந்தவிநாஶஹேதோ ।
ஸ்ம்ரு’த்யா தவைவ ந விவேத$_3$ தநும் ஸுப$_4$க்த:
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **5** ॥

ஸூதாதி$_3$த$_3$த்தவிஷபாநஸமாநகால -
    நாமாம்ரு’தேந பரிபாலிததைத$_3$த்யபுத்ர ।
ப்ரஹ்லாத$_3$தே$_3$ஹபரிரக்ஷணஜாக$_3$ரூக
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **6** ॥

ஸம்ருஷ்டதைத$_3$த்யபதிசோதி$_3$ததி$_3$க்$_3$க$_3$ஜாதி$_3$ -
    த$_3$ந்தாதி$_3$நாஶபரிதோஷிதப$_4$க்தடி$_3$ம்ப$_4$ ।
ப$_4$க்தாபி$_4$பாலநவிசித்ரவிஶேஷதீ$_3$க்ஷ
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **7** ॥

ஶைலாக்$_3$ரபா$_4$க$_3$பதமாநஹிரண்யடி$_3$ம்ப$_4$ -
    ஸம்ரக்ஷணாய ம்ரு’து$_3$பூ$_4$தத$_4$ராதி$_4$நாத$_2$ ।
தை$_3$த்யேந்த்$_3$ரபுத்ரஹ்ரு’த$_3$யாஸநமங்க$_3$ளாங்க$_3$
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **8** ॥

விஷ்ணுப்ரபா$_4$வபரிகீர்தநப$_3$த்$_3$த$_4$வைர -
    தை$_3$த்யேந்த்$_3$ரப$_3$த்$_3$த$_4$ஶிஶுப$_3$ந்த$_4$நமோக்ஷஹேதோ ।
க்ஷிப்தோऽர்ணவே தடமகா$_3$த் க்ரு’பயா தவைவ
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **9** ॥

ஸர்வேஷ்வஸௌ வஸதி ஸர்வஶரீரவிஷ்ணு:
    ப்ரு’ஷ்டஸ்த்வயா விதி$_3$த ஏவ புராப்யநந்த: ।
இத்யுக்தவந்தமஸுராத் பரிரக்ஷஸி ஸ்ம
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **10** ॥

ப$_4$க்தஸ்ய தா$_3$நவஶிஶோர்வசநஞ்ச ஸத்யம்
    கர்தும் ததா$_3$ முநிக$_3$ணஸ்ய ஸமக்ஷமேவ ।
ஸ்தம்பா$_4$வதீர்ண தி$_3$திபுத்ரவிநாஶகாரிந்
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ ! மம தே$_3$ஹி கராவலம்ப$_3$ம் ॥ **11** ॥

ஸந்தீ3பிதாக்3நிபரிவேஷ்டிதகாஷ்ட2மத்4யம்
ஸம்ப்ராபிதாம் யதிதநும் த்வயஸாபி ப3த்3தா4ம் ।
ஸம்ரக்ஷஸி ஸ்ம ஶரணாக3தஶங்கரஸ்த்வம்
லக்ஷ்மீந்ரு'ஸிம்ஹ ! மம தே3ஹி கராவலம்ப3ம் ॥ **12** ॥

உத்தாரணம் கலியுகே3 த்விதி தாபநீய -
ஶ்ருத்யுக்த ஏவ க3ருடா3த்3ரிபி3லே ந்ரு'ஸிம்ஹ ।
ஆவிர்ப3பூ4வித2 ஜக3த்3ப4ரணாய யஸ்த்வம்
லக்ஷ்மீந்ரு'ஸிம்ஹ ! மம தே3ஹி கராவலம்ப3ம் ॥ **13** ॥

காலே கலௌ து ஜக3தாம் பரிபாலநாய
ஸ்வாராத4காந் யதிவராந் பரிக்3ரு'ஹ்ய ப4க்தாந் ।
க்3ராமேஷு ஸஞ்சரஸி ப4க்திபராஶயஜ்ஞை:
லக்ஷ்மீந்ரு'ஸிம்ஹ ! மம தே3ஹி கராவலம்ப3ம் ॥ **14** ॥

ஶந்நோ ப4வத்விதி ந்ரு'ஸிம்ஹகராவலம்ப3 -
ஸ்தோத்ரஞ்சகார நிக3மாந்தகு3ருர்யதீந்த்3ர: ।
ஸர்வஸ்ய புத்ரத4நதா4ந்யஸம்ரு'த்3தி4ஸித்3த்4யை
த3த்3யாத்3 ரமாநரஹரிஸ்ஸ்வகராவலம்ப3ம் ॥ **15** ॥

॥ இதி ஶ்ரீ லக்ஷ்மீந்ரு'ஸிம்ஹகராவலம்ப3ஸ்தோத்ரம் ஸமாப்தம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ ஸ்ரீ லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹப்ரபத்தி: ॥

யஸ்யாப$_4$வத்$_3$ப$_4$க்தஜநார்திஹந்து:
பித்ரு’த்வமந்யேஷ்வவிசார்ய தூர்ணம் ।
ஸ்தம்பே$_4$ऽவதாரஸ்தமநந்யலப்$_4$யம்
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **1** ॥

ஸ்ரீதாபநீயேऽப்ரதிமப்ரபா$_4$வம்
ஸ்ரீதைத்திரீயேகுசரோகி$_3$ரீஷ்ட$_2$: ।
இதீவ பக்ஷீந்த்$_3$ரத$_4$ராத$_4$ரஸ்த்வம்
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **2** ॥

ஸம்வர்க$_3$ வித்$_3$யா விலஸத்ஸ்வரூபம்
ஸ்தம்பை$_4$கடி$_3$ம்பா$_4$த்மலஸத்ப்ரபா$_4$வம் ।
த்ரைலோக்யஸம்பூர்ணந்ரு’ஸிம்ஹமூர்திம்
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **3** ॥

ஹிரண்யதா$_3$தாரமபீந்த்$_3$ரஹேதோ:
ஹிரண்யஹந்தாரமதா$_2$ஷ்டபா$_3$ஹும் ।
ஶாந்தம் ஸதாம் உக்$_3$ரம் அஸத்ஸமாஜே
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

ஸந்தோஷஹாஸேந ஸதா$_3$ரமாயாம்
வ்யாந்தாநநம் ஸ்வர்ண ஸடாபி$_4$ராமம் ।
ஜிஹ்வாத$_4$ரந்யஸ்த ரமேக்ஷணாந்தம்
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **5** ॥

ஸஞ்சாரயோக்$_3$யாம் ச பதா$_3$வஹறந்தம்
ஶ்ரீபாது$_3$காம் சேஞ்சுஸூதாம் ரமாம் ச।
ஸவ்யேந ஹஸ்தேந பரிஷ்வஜந்தம்
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **6** ॥

ஶ்ரீமத்$_3$ த்$_3$வயார்தோ$_2$ ஹ்யஹமேவ ஸத்யம்
இதீவ ஸர்வாந் ப்ரதிபோ$_3$த$_4$யந்தம்।
ரமாந்ரு’ஸிம்ஹந்த்வவிப$_4$க்தரூபம்
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **7** ॥

ஶ்ரீவேங்கடேஶேந விவாஹகாலே
ஸம்பூஜிதம் ஸர்வவிதோ$_4$பசாரை:।
ஶ்ரீஶங்க$_2$சக்ராப$_4$யபா$_3$ஹுதீ$_3$ப்தம்
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **8** ॥

அஹோபி$_3$லம் ஸாநுஜ ஏத்ய ராம:
ரமாஹரேர்யஸ்ய சகார பூஜாம்।
பத்$_3$யைஶ்ச பஞ்சாம்ரு’த போ$_4$க்$_3$யஶப்$_3$தை$_3$:
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **9** ॥

ஸமாஶ்ரயார்த$_2$ந்த்வபராதி$_4$வர்கே$_3$
ஸமாக$_3$தே தத்ர நிவ்ரு’த்தவக்த்ரம்।
ஶ்ரீவாக்யஸந்துஷ்ட க்ரு’பார்த்$_3$ரநேத்ரம்
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **10** ॥

ஸஞ்சாரயோக்$_3$யம் ப்ரஸமீக்ஷ்யகாலம்
காலே கலௌ யஸ்த்வரயாऽப்$_4$யஷிஞ்சத்।
ஶ்ரீவாஸநாமாநமஹோ முநீந்த்$_3$ரம்
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **11** ॥

ஸமாஶ்ரிதாநாமிஹ ஸேவநார்த$_2$ம்
    அஹோபி$_3$லேஹ்யத்$_3$யமடே$_2$ ஜ்வலந்தம் ।
ஸுவர்ணடோ$_3$லாவிலஸத்ஸ்வரூபம்
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **12** ॥

ஶ்ரீவண்ஶடா$_2$ராதியதீந்த்$_3$ர பூர்வை:
    ஸ்தா$_2$நேऽபி$_4$ஷிக்தைர்யதிராஜசந்த்$_3$ரை: ।
ஸம்பூஜிதம் ஹ்யாத்மத$_3$மாத்மதா$_3$நாம்
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **13** ॥

அஹோபி$_3$லே கா$_3$ருட$_3$ஶைலமத்$_4$யே
    க்ரு’பாவஶாத் கல்பித ஸந்நிதா$_4$நம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கி$_3$தவாமபா$_4$க$_3$ம்
    லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **14** ॥

லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹார்சந ஹ்ரு’ஷ்டசித்த:
    ப$_4$க்த்யைவ வேதா$_3$ந்தகு$_3$ருர்யதீந்த்$_3$ர: ।
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹஸ்ய ஶுபா$_4$ம் ப்ரபத்திம்
    சக்ரே ஜநாநாம் நிகி$_2$லார்த$_2$ஸித்$_3$த்$_4$யை ॥ **15** ॥

॥ இதி ஶ்ரீ லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹப்ரபத்தி: ஸமாப்தா ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# ॥ ஸ்ரீ லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹமங்க3ளம் ॥

மங்க3ளம் ஸ்ரீகு3ருப்4யோऽஸ்து தத்3கு3ரூணாம் ச மங்க3ளம் ।
தத்ராத்3யகு3ரவே நித்யம் ஸ்ரீந்ரு’ஸிம்ஹாய மங்க3ளம் ॥ **1** ॥

ஶேஷிணே ஸர்வபூ4தாநாம் ஸர்வலோகஹிதைஷிணே ।
ப4த்3ராயாந்தர்யமயதே ஸ்ரீந்ரு’ஸிம்ஹாய மங்க3ளம் ॥ **2** ॥

ஸர்வவ்யாப்திமதே நித்யம் தி3வ்யமங்க3ளமூர்தயே ।
ஸர்வத்ர பரிபூர்ணாய ஸ்ரீந்ரு’ஸிம்ஹாய மங்க3ளம் ॥ **3** ॥

தா3நவேந்த்3ரஶிஶோர்வாக்யம் கர்தும் ஸத்யம் மஹீதலே ।
ஸ்தம்பா4ஜ்ஜாதாய தி3வ்யாய ஸ்ரீந்ரு’ஸிம்ஹாய மங்க3ளம் ॥ **4** ॥

மத்தத்3விபநிப4ம் தை3த்யம் நகா2க்3ரைர்வஜ்ரஸந்நிபை4: ।
ஸத்3யோ ஹந்த்ரே ச தம் க்ரோதா4த் ஸ்ரீந்ரு’ஸிம்ஹாய மங்க3ளம் ॥ **5** ॥

ஸடாபடலபீ4மாய ப்ரஹ்லாதா3நந்த3தா3யிநே ।
நமஸ்க்ரு’தாய தே3வாத்3யை: ஸ்ரீந்ரு’ஸிம்ஹாய மங்க3ளம் ॥ **6** ॥

தை3த்யேந்த்3ரபுத்ரம் ப்ரஹ்லாத3ம் அபி4ஷிச்ய க்ரு’தாஞ்ஜலிம் ।
ஸந்துஷ்டஹ்ரு’த3யாயாஶு ஸ்ரீந்ரு’ஸிம்ஹாய மங்க3ளம் ॥ **7** ॥

க்ஷேத்ரே த்வஹோபி3லே தி3வ்யே க3ருடா3த்3ரௌ க்ரு’பாவஶாத் ।
ஜ்வாலாதி3நவரூபாய ஸ்ரீந்ரு’ஸிம்ஹாய மங்க3ளம் ॥ **8** ॥

ஆஶ்ரிதாபீ4ஷ்டதா3நாய ஸ்வாராத4நபராந் கு3ரூந் ।
ஸம்ப்ராப்ய ஹ்ரு’ஷ்டசித்தாய ஸ்ரீந்ரு’ஸிம்ஹாய மங்க3ளம் ॥ **9** ॥

நித்யாராத4நதுஷ்டாய நித்யபோ4க3ப்ரதா3யிநே ।
நித்யஸஞ்சாரத3க்ஷாய ஸ்ரீந்ரு’ஸிம்ஹாய மங்க3ளம் ॥ **10** ॥

மங்க3ளம் ஸ்ரீந்ரு’ஸிம்ஹஸ்ய ய: படே2த் ப்ரத்யஹம் ஶுப4ம் ।
லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹகருணா த3த்3யாத் தஸ்ய ஸுமங்க3ளம் ॥ **11** ॥

இத்த2ம் ஸ்ரீவேத3சூடா3ர்யயதீந்த்3ரேண க்ரு’தம் ஶுப4ம் ।
மங்க3ளம் ஸ்ரீந்ரு’ஸிம்ஹஸ்ய ஜீயாதா3சந்த்3ரதாரகம் ॥ **12** ॥

॥ இதி ஸ்ரீ லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹமங்க3ளம் ஸமாப்தம் ॥

# UBHAYAM / SEVA DETAILS

| SEVA | PRASAD |
|---|---|
| NITYARADHANA FUND ₹1,00,000 – ENDOWMENT FUND WILL BE CREATED IN THE SPONSOR'S NAME | ON A FIXED DAY IN A YEAR AS PER SPONSOR'S WISH ABHISHEK, ARCHANA, WILL BE DONE. SPONSOR WILL GET TULSI/FLOWER, KUMKUM AND KALKANDU PRASAD |
| ONE DAY PRASADM ₹ 5000 – ON ANY DAY AS PER SPONSOR'S REQUIREMENT | ARCHANA, WILL BE DONE. SPONSOR WILL GET TULSI/FLOWER, KUMKUM AND KALKANDU PRASAD / SWEET PONGAL |
| GHEE LAMP FOR MALOLA ₹ 3000 FOR 48 DAYS | GHEE LAMP WILL BE LIT IN MALOLA SANNIDHI FOR 48 DAYS. |
| OIL LAMP FOR MALOLA ₹ 1000 FOR 48 DAYS | OIL LAMP WILL BE LIT IN MALOLA SANNIDHI FOR 48 DAYS. |
| ABHIHSEK ON EKADASI, AMAVASYA, POURNAMI, MASA PIRAPPU, (UTSAVAR ₹ 2500) - SWATHI (MOOLAVAR -₹ 3000) | ABHISHEK AND ARCHANA, WILL BE DONE. SPONSOR WILL GET TULSI/FLOWER, KUMKUM AND KALKANDU PRASAD / SWEET PONGAL |
| PRADOSHA PANAGAM OFFERING TO ALL NARASIMHAS ₹ 1000 | ARCHANA WILL BE DONE AND SPONSOR WILL GET PANAGAM |
| DAILY PANAGAM OFFERING ₹ 250 | ARCHANA WILL BE DONE AND SPONSOR WILL GET PANAGAM |
| SWATI ANNA DANAM ₹ 1000 | ANNA DANAM WILL BE DONE ON SWATI DAY. SPONSOR WILL GET ANNA PRASAD |
| DAILY OIL LAMP FOR ALL SANNIDHIS ₹ 500 | ARCHANA AND TULSI KUMKUM PRASAD |
| GHEE LAMP AT BRINDAVANAM ₹ 100 | GHEE LAMP WILL BE LIT AT BRINDAVANAM |
| AMAVASYA ANNA DANAM ₹ 1500 | ANNA DANAM WILL BE DONE ON AMAVASYA DAY. SPONSOR WILL GET ANNA PRASAD |
| ASHTOTRA ARCHANA PERUMAL THAYAR ₹ 100 | ARCHANA AND TULSI KUMKUM PRASAD |
| SAHASRANAMA ARCHANA ₹ 600 | ARCHANA AND TULSI KUMKUM PRASAD |
| ANNA DANAM ON OTHER DAYS ₹ 3000 | ARCHANA AND TULSI KUMKUM PRASAD |
| OFFERING SWEET PONGAL PRASAD ₹ 1000 | ARCHANA AND TULSI KUMKUM PRASAD |
| OFFERING VASTRAM TO PERUMAL / THAYAR ₹ 2500 | ARCHANA AND TULSI KUMKUM PRASAD |

## SPONSORSHIP PAYMENT OPTIONS

### NEFT / RTGS / BANK TRANSFERS

**SPONSORS FROM ABROAD (APPROVED UNDER FCRA)**

IN FAVOUR OF " NYMISARNAYAM AZHAGIYASINGAR CHARITABLE TRUST"
SAVINGS ACOUNT NO. 40220924795
IFSCODE : SBIN0000691
STATE BANK OF INDIA MAIN BRANCH
PARLIAMENT STREET, NEW DELHI 110001

**SPONSORS FROM INDIA**

IN FAVOUR OF " NYMISARNAYAM AZHAGIYASINGAR CHARITABLE TRUST"
CURRENT ACOUNT NO. 36706751438
IFSCODE : SBIN0002190
STATE BANK OF INDIA
ALWARPET BRANCH, CHENNAI 600018

### UPI PAYMENTS

**PAYMENT ID**

UPI ID
9867550318@indianbk

**QR CODE**

**BANK DETAILS**

NAME OF ACCOUNT " NYMISARNAYAM AZHAGIYASINGAR CHARITABLE TRUST"
SAVINGS
ACOUNT NO. 7758804715
INDIAN BANK
IFSCODE : IDIB000M714 – MISRIKH CUM NEEMSAR BRANCH, GANJMOHANA, NAIMISHARANYAM - PINCODE 261402

உபயம் செலுத்துபவர்கள் தங்கள் பெயர் , விலாசம், போன் நம்பர், PAN நம்பர் மற்றும் உபயம் செலுத்திய விபரம் இவைகளை E-MAIL nymisaranyamtrust@gmail.com அல்லது WhatsApp no. 9867550318 நம்பரில் தரும்படி வேண்டுகிறோம். விபரம் கொடுத்தவர்களுக்கு உபயம் செலுத்தியதிற்கு ரசீதும், ப்ரஸாதங்களும் தபாலில் அனுப்பிவைக்கப்படும்

DR S PADMANABHAN
SRIKARYAM
SRI AHOBILAMUTT

S SARANATHAN
MANAGING TRUSTEE
NYMISARANYAM AZHAGIYASINGAR CHARITABLE TRUST
CONTACT NO. 9867550318 / 9867550316_